உ

சிவமயம்

சைவசமய ஞானவிருத்தி நிலைய

ஆறுவது

இலவச வெளியீடு



# விநாயகர் தோத்திரம்

மருதம்ஸ் அச்சகம்
97, மானிப்பாய் வீதி,
வண்ணார்பண்ணை

உ

சிவமயம்



# விநாயகர் வணக்கம்

பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது — பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியி லுறைபவ
கற்பக எனவினை கடிதேகும்

சிவசங்கரசுத நமோ நமோ
சதுரா ரணமுன் துதிகோவே
மதவா ரணநன் முகதேவே
பவப்புண ரிக்கோர் நாவாயே
உவப்புற வந்தெமைக் காவாயே
செஞ்சக் கரதரன் மருகோனே
பஞ்சக் கரந்திகழ் பெருமாளே
பாசாங் குசதர கரதலனே
மாசாந் தகர்தொழு பிரபலனே
முனிவர் தினந்தொழு தற்பரனே
கனியர னிடம்பெறு மற்புதனே
மேருவிற் பாரத மெழுதியவா
சாருமிவ் வேழைக் கருள்தருவாய்
சரணம் சரணம் தந்திமுகா
சரவண பவனுக் குயர்துணைவா.

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
யானைமுக னைப்பரவி அஞ்சலிசெய் கிற்பாம்.

அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐங்கரத் தானைமுகப் பெருமாளே.

---

பக்கரைவி சித்ரமணி பொற்கலணை யிட்டநடை
பக்ஷியெனு முக்ரதுர கமுநீபப்
பக்குவம லர்த்தொடையும் அக்குவடு பட்டொழிய
பட்டுருவ விட்டருள்கை வடிவேலும்
திக்கதும திக்கவரு குக்குடமும் ரக்ஷைதரு
சிற்றடியு முற்றியப னிருதோளும்
செப்பதியும் வைத்துயர் திருப்புகழ் விருப்பமொடு
செப்பென எனக்கருள்கை மறவேனே
இக்கவரை நற்கனிகள் சர்க்கரை பருப்புடனெய்
எட்பொரிய வற்றுவரை யிளநீர்வண்
டெச்சில்பய றப்பவகை பச்சரிசி பிட்டுவெள
ரிப்பழமி டிப்பல்வகை தனிமூலம்
மிக்கஅடி சிற்கடலை பட்சணமெ னக்கொளொரு
விக்கிணச மர்த்தனெனு மருளாழி
வெற்பகுடி லச்சடில விற்பரம ரப்பருள்
வித்தகம ருப்புடைய பெருமாளே

வாவா வாவா நற்பரனே
    வந்து நிதம் அருள் தந்திடுவாய்
ஏழைக்கென்றும் அருள் புரிவாய்
    ஈஸ்வரி பாலா ஏரம்பா
உமைதரு பாலா குருமணியே
    உந்தனடைக்கலம் அடியேனே
சத்தசமுத்திர மொத்திடு மும்மத
    தந்தித் தொந்தி வயிற்றோனே
ஆகுவாகன அம்பிகை வர்த்தன
    மகா கணபதே பாலயமாம்
ஒருகொம் பிருசெவி மும்மதமோ
    டோரொரு நால்வாய் ஐங்கரனே
அனுதின மும்மருள் ஐங்கரனே
    ஆதி யனுதியோ ரட்சரமே
பார்ப்பதி பாலா வாவா வா
    பரபத மெமக்கே தாதா தா
மங்களமருளுக ஐங்கர முதல்வா
    அரிதிருமருகா குருபர நமநம
மகாகணபதே குரு சரணம்
    மனம் மகிழ்ந்துவந் தருள்சரணம்

வாவா வாவா நற்பரனே
வந்து நிதம் அருள் தந்திடுவாய்
ஏழைக்கென்றும் அருள் புரிவாய்
ஈஸ்வரி பாலா ஏரம்பா
உமைதரு பாலா குருமணியே
உந்தனடைக்கலம் அடியேனே
சத்தசமுத்திர மொத்திடு மும்மத
தந்தித் தொந்தி வயிற்றேனே
ஆகுவாகன அம்பிகை வர்த்தன
மகா கணபதே பாலயமாம்
ஒருகொம் பிருசெவி மும்மதமோ
டோரொரு நால்வாய் ஐங்கரனே
அணுதின மும்மருள் ஐங்கரனே
ஆதி யனாதியோ ரட்சரமே
பார்ப்பதி பாலா வாவா வா
பரபத மெமக்கே தாதா தா
மங்களமருளுக ஐங்கர முதல்வா
அரிதிருமருகா குருபர நமநம
மகாகணபதே குரு சரணம்
மனம் மகிழ்ந்துவந் தருள்சரணம்

சிவசங்கரசுத நமோ நமோ
சதுரா ரணமுந் துதிகோவே
மதவா ரணநன் முகதேவே
பவப்புண ரிக்கோர் நாவாயே
உவப்புற வஞ்செமைக் காவாயே
செஞ்சக் கரதரன் மருகோனே
பஞ்சக் கரந்திகழ் பெருமாளே
பாசாங் குசகர கரதலனே
மாசாந் தகர்தொழு பிரபலனே
முனிவர் தினந்தொழு தற்பரனே
கனியர ணிடம்பெறு மற்புதனே
மேருவிற் பாரத மெழுதியவா
சாருமிவ் வேழைக் கருள்தருவாய்
சரணம் சரணம் தந்திமுகா
சரவண பவனுக் குயர்துணைவா.

---

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
யானைமுக னைப்பரவி அஞ்சலிசெய் கிற்பாம்.